**வவுனியா வடக்கு பிரதேச சபை**

---

**வவுனியா மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்ரெம்பர் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபையின் ரூபா 219,544 கடன் தொகைகள் வருட இறுதியில் உள்ள ஊழியர் கடன் மீதியில் உள்ளடக்கப்படாமையால் பதவியினர் கடன் மீதி குறைத்து காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் பெறப்பட வேண்டிய முத்திரைத்தீர்வை ரூபா 1,724,164 ஆக உள்ளபோதும் மிளாய்வாண்டில் அரசிறை கடனாளிகள் கணக்கில் உள்ளடக்கப்படாமையால் சபையின் நடைமுறைச் சொத்து குறைத்துக்காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.2 ஆவணச் சான்றுகள் இன்மை.

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,815,647 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிக்கோவை | |
| (i) விதி இல. 217 | சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி இல. 165 | பிரதான ஏட்டில் பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பன பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 1,150,532 நீண்ட காலமாக உள்ள போதும் நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 1990 ஒக்டோபர் 10 ம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 41/90, 02-1ஆம் பந்தி | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருளினால் தாங்கியை பூரணமாக நிரப்பி ஓட்டத்தில் ஈடுபடுத்தி எரிபொருள் நுகர்வினை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2016 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 7,201,813ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 7,232,745 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 30,932 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

நயினாமடு கரப்புக்குத்தி வீதிக்கு கல்லிட்டுத்தாரிடல் வேலைக்காக முதலில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதனால் 2013 தொடக்கம் 2016 வரை நீதிமன்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நீதிமன்றச் செலவு ரூபா 593,808 ஏற்பட்டுள்ள போதும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான முகாமைத்துவம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பாதீட்டு மதப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமைமேயுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**2.3.2 ஆதனவரி**

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**(அ) நீதிமன்ற குற்றப்பணம்**

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் வவுனியா நீதி மன்றத்தினால் 2016 டிசம்பர் 31 வரை சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 94,910 பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது.

**(ஆ) முத்திரைக் கட்டணங்கள்**

2011 தொடக்கம் 2015 வரை சபையினால் பெறப்பட வேண்டிய முத்திரை தீர்வை ரூபா 1,724,164 ஆக இருந்ததுடன் பெறப்பட வேண்டிய முத்திரை தீர்வையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை

**2.4 முகாமைத்துவ செயற்திறனின்மை**

அ) சபையில் காணப்படும் 04 வாகனங்களின் உரிமையானது சபைக்கு உரியதாக இல்லாத போதும் அதன் உரிமை மாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆ) கடந்த ஆண்டு வருடாந்த கணிப்பீட்டுச் சபையில் குறிப்பிடப்பட்ட 25 வகையான பொருட்கள் குறைவாகக் காணப்பட்ட போதும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.5 சொத்து முகாமைத்துவம்**

நெடுங்கேணி பிரதேச சபைக்கு வடக்கின் துரித மீளெளிச்சித் திட்டத்தினால் 12.08.2011இல் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 26,137,591 பெறுமதியான பஸ் நிலையத்தினை பாவனைக்கு உட்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) வருமான சேகரிப்பு.

(ii) நிலையான சொத்துக்கள்

(iii) முற்பணப் பெறுகைகள்

(iv) முற்பணக் கொடுப்பனவுகள்

(v) மூலதன வேலைகள்

(vi) பிரதான பேரேட்டுப் பராமரிப்பு